தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 22, யுவ, திருவள்ளுவர் ஆண்டு--2026

1995 நவம்பர் 8, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்."

ஒட்டி உறவாடும் நண்பர்கள்போல் நடித்து நல்லனவற்றைச் சொல்வதுபோல் சொல்லினும், ஒட்டாத தன்மை மிக்க பகைவர்கள் கூறும் சொற்களின் உண்மைத் தன்மை விரைவிலேயே உணரப்பட்டுவிடுகிறது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண் 41, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

41—

கண்மாய்களில் வழங்கப்பட்ட பட்டாக்களை ரத்து செய்தல்

*9626-**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கண்மாய்களில் தனி நபர்களுக்குப் பட்டா வழங்கிய காரணத்தால் மழைக் காலங்களில் நீர் தேங்கும் அளவு குறைந்துள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கண்மாய்களில் கொடுக்கப்பட்ட பட்டாக்களை ரத்து செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு ஆதீன ஒழிப்புச் சட்டம் 49/1974 கொண்டுவந்த பின்பு, கண்மாய்களில் பட்டா வழங்கப்படுவது இல்லை. மேலும், கண்மாய் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வீட்டுமனை அல்லது விவசாய நில ஒப்படைப்பு வழங்க 20-1-1987 நாளிட்ட வருவாய்த்துறை அரசாணை எண் 41-ல் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி கண்மாய் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில பட்டா அறவே வழங்கக் கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய காலத்திலே பட்டாக்கள் வழங்கிய காரணத்தினாலே, ஏற்கெனவே இருந்த நிலை எல்லாம் மாறி 100 ஏக்கர் உள்ள கண்மாய், இன்றைக்கு 25 ஏக்கர், 15 ஏக்கர் என்ற அளவிற்கு ஆகிக்கொண்டிருக்கிறது. நம்முடைய காலத்திலே கொடுக்கா விட்டாலும்கூட, பழைய காலங்களிலே கொடுத்து இருக்கிறார்களே, அந்த நிலங்களை எல்லாம் தயவுசெய்து அறிந்து ஆராய்ந்து, பழைய பட்டாக்களை நாம் கேன்சல் செய்தால்தான் மழைக்காலங்களிலே தண்ணீர் தேங்கும். அங்கு தண்ணீர் தேங்குவதை வைத்து கிணறுகளுக்கு, விவசாயக் கிணறுகளுக்கு பெர்குலேஷன், ஊற்றுநீர் கிடைக்கும். ஆகையினால் பழைய நிலங்களில், அதாவது சுதந்திரத்திற்கு முன்பு கண்மாய் எந்த அளவிற்கு இருந்ததோ அந்த நிலைமைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை அமைச்சர் அவர்களால் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலும், அப்படி ஆக்கிரமம் செய்து இருப்பவர்களின் எண்ணிக்கை 10,99,982. ஆக்கிரமம் செய்த பரப்புகள் 7,87,357 ஏக்கர். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை

1995 நவம்பர் 8]

நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இருந்தாலும், பல இடங்களில் ஆக்கிரமம் செய்து கொண்டிருக்கிறார்கள். தகுதி படைத்தவர்களும் ஆக்கிரமம் செய்கிறார்கள்; தகுதி இல்லாதவர்களும் ஆக்கிரமம் செய்கிறார்கள். ஏழைகள் ஆக்கிரமம் செய்கிறார்கள்; வசதி படைத்தவர்கள் ஆக்கிரமம் செய்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், வசதி படைத்தவர்கள்தான் வளம் உள்ள நிலங்களை ஆக்கிரமம் செய்கிறார்கள். அது அரசினுடைய கவனத்திற்கு வரும்போது எல்லாம், அதை அப்புறப்படுத்திக்கொண்டிருக்கிறோம். பொதுவாக, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொல்கிறபடி, இப்படி ஆக்கிரமம் செய்வதினால், வாய்க்கால் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, குளம் புறம்போக்கு, கண்மாய்ப் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு, வெள்ளவாரி புறம்போக்கு-இவைகளை ஆக்கிரமம் செய்ததனால்தான் நிலத்தடி நீர் அதிகமாக இல்லாமல் குறைவதற்குக் காரணமாக இருக்கிறது. இது அரசுக்கு மட்டுமல்ல, எல்லா மக்களுக்கும் தெரிந்ததுதான். சாதாரணமாக இருக்கிற, ஒன்றும் தெரியாத, படிக்காத விவசாயிகளுக்கு இது நன்றாகத் தெரியும். ஆனால், சிறு விவசாயிகளைவிட, பெரிய விவசாயிகள் தான், தெரிந்து இருந்தும் ஆக்கிரமம் செய்கிறார்கள். அந்த ஆக்கிரமத்தை அகற்றுவதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய பதில் வரவேற்கக்கூடிய ஒன்றாக இருந்தாலும்கூட-அதை வரவேற்கிறேன்; ஆனால்-பல இடங்களில், உதாரணத்திற்கு எனக்குச் சொந்தமான கண்மாய் *12* ஏக்கர்; இந்த *12* ஏக்கர் கண்மாயை நாங்கள் *1958*-லே கையெழுத்து வாங்கி, அதைப் புறம்போக்காக ஆக்கிவிட்டோம். அதைப் புறம்போக்காக ஆக்கிய பிறகு, *1974*-வது ஆண்டு எங்கள் ஊரில் உள்ள ஒரு தனி நபருக்கு *3* ஏக்கர், *4* ஏக்கர் பட்டா போட்டுக் கொடுத்துவிட்டார்கள்; பட்டா போட்டுக் கொடுத்து அப்படியே சேர்த்து வருகிறார்கள். இந்தமாதிரி சோழவந்தான் பகுதியிலே நிறைய இடங்களிலே பட்டா போட்டு ஆக்கிரமம் செய்து, அதை அகற்றவே முடியவில்லை. இப்படி எங்கெங்கெல்லாம் தனிப்பட்டவர்கள், தனக்குச் சொந்தமான நிலத்தை அரசாங்கத்திற்குப் புறம்போக்காக ஆக்க வேண்டுமென்று ஒப்படைத்த பிறகுகூட, அந்தமாதிரி நிலத்தை எல்லாம் பட்டா கொடுத்து இருக்கிறார்களே அந்தமாதிரி நிலங்கள், மாநிலம் முழுவதும் எந்தெந்த ஊர்களில் இருக்கின்றன என்று கணக்கெடுத்து

அவற்றிற்கெல்லாம் பட்டா கொடுத்ததை நீக்கினால்தான் கடந்த 10 ஆண்டுக் காலமாக மழையில்லாமல் மிகப்பெரிய நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கும் மக்களை அந்த நஷ்டத்திலிருந்து பாதுகாக்க முடியும். அப்படி நஷ்டத்திற்கு ஆளாகாமல் மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு ஏற்கெனவே கொடுத்த பட்டாக்களை ரத்து செய்வதற்கான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வழங்கிய பட்டாக்களை நீக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி நீக்குகிறபோது பாதிக்கப்பட்டவர்கள் உச்சநீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். உச்சநீதிமன்றத்தில் அந்த வழக்கில் இருக்கும் நியாயங்களைப் பார்த்து தீர்ப்பு வழங்குகிறார்கள். சில நேரங்களில் உச்சநீதிமன்றத்திற்கு வழக்குகள் அரசு சார்பாக செல்கிறபோது அந்த வழக்குகளில் உச்சநீதிமன்றம் அதில் சம்மந்தப்பட்ட தனியார்களுக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கிவிடுகிறது. அப்படி தீர்ப்பு வழங்கப்பட்டாலும் அதை எதிர்த்து அரசு வாதாடுகிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால் 32 இலட்சத்து 11 ஆயிரத்து 56 பேருக்கு நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றினுடைய பரப்பு 23 இலட்சத்து 84 ஆயிரத்து 62 ஏக்கர் ஆகும். அப்படி வழங்கப்பட்டதில் தவறாக வழங்கப்பட்டவை என்று கண்டுபிடித்து அதிலே 223 பேர்களுக்கு பட்டாக்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி ரத்து செய்யப்பட்ட நிலங்களின் பரப்பளவு 1675 சதுர மைல். அப்படி ரத்து செய்யக்கூடிய ஆணைகள் வருகிறபோது பாதிக்கப்பட்டவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். இருந்தாலும் அரசு கவனமாக பார்த்து இவைகளை எல்லாம் சரிசெய்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்பிடிப்பு நிலங்களான குளங்களை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்வதால், மழைக் காலங்களில் நீரைத் தேக்கி வைக்க முடியாத நிலை ஏற்பட்டு எங்கள் தொகுதியில் மிகுந்த குடிநீர்ப் பிரச்சினையும், வறட்சியும் நிலவுகிறது. ஆகவே இதை எமர்ஜென்சிக்கு கீழே கொண்டு வந்து, ஆக்கிரமிப்பு செய்து குடிசைகள் போட்டிருந்தால்கூட

1995 நவம்பர் 8]

மன்னிக்கலாம், பெரும்புள்ளிகள் பணபலம், அடியாள் பலம் உள்ளவர்கள் நீர் வரத்தைத் தடுத்து அங்கு தொழிற்சாலைகள் தொடங்க முயற்சிப்பதால் இப்படிப்பட்ட துர்பாக்கியமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கோர்ட்டிலே பாதிக்கப்பட்டவர்கள் எதைச் சொன்னாலும், இது மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை, விவசாயிகளின் பிரச்சினை என்பதை கருத்தில் கொண்டு அதற்கேற்ற முறையில் வாதாடி, அரசு அந்தப் பட்டாக்களையெல்லாம் ரத்து செய்து நீர்பிடிப்புப் பகுதிகளை எல்லாம் மீட்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. உதாரணமாக பெரிய ஏரிகளுக்குள்ளே ஆக்கிரமிப்பு செய்து 50 ஏக்கர் விவசாயம் செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அந்த ஏரிக்கு 1000 ஏக்கர் அல்லது 500 ஏக்கர் பாசனம் இருக்கும். மழைக் காலத்தில் மழை பெய்துவிட்டால் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் ஏரியின் கரையை வெட்டிவிடுகிறார்கள். அப்படி வெட்டுவதால் 50 ஏக்கர் விவசாயிகளின் பாசனம்தான் காப்பாற்றப்படுகிறது, அதற்குப் பின்னாலே இருக்கும் 1000 ஏக்கர் நிலம் பாதிப்புக்கு உள்ளாகிறது என்பதை அரசு உணர்கிறது. அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. எனவே ஆக்கிரமிப்பு எங்கெங்கு செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்களும், வருவாய்த் துறை அதிகாரிகளும், மற்றவர்களும் கணக்கிட்டு அவற்றையெல்லாம் அகற்றிக் கொண்டு இருந்தாலும், உங்களுடைய கவனத்திற்கு வருவதை, எவ்வளவு நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கிறது, அதனால் யார் பாதிப்பட்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

முற்பகல் 10-10

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளம், குட்டைகள், ஏரி, வாரி புறம்போக்கு போன்ற பகுதிகளில் வசதி படைத்தவர்கள் ஆக்கிரமித்திருந்தால் அவர்களை அகற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்னுடைய பெரியார் மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய

தொகுதியில் 4, 5 இடங்களில் ஏழை எளியவர்கள், அரிசன மக்கள், வீடு இல்லாதவர்கள் அப்படிப்பட்ட பகுதிகளிலே குடியிருந்து வருகிறார்கள். அவை எல்லாம் வயல் நிலங்களாக இருக்கின்ற காரணத்தால் அவற்றை ஆதிதிராவிடர் நலத் துறை ஆர்ஜிதம் செய்ய முடியாத சூழ்நிலையில், அங்கே இருக்கின்ற வாரி புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு போன்ற சின்னச் சின்ன பகுதிகளில் அவர்கள் குடி இருந்து வருகிறார்கள். சுமார் 100 ஆண்டுகளாக, 50 ஆண்டுகளாகக் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுடைய குடிசைகளுக்கு ஒரு விளக்கு இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஆழ்குழாய்க் கிணறு போடப்பட்டிருக்கிறது. வீதி விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் பட்டாக்கள் மட்டும் இல்லாத ஒரு சூழ்நிலையில் அவர்கள் இருந்து வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அந்த விவரங்களை எல்லாம் ஏற்கெனவே கொடுத்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஏழை எளிய மக்கள், குடியிருப்பதற்கு தங்களுக்கென்று சொந்தமாக இடமில்லாத மக்கள், அவர்கள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் வாழும் பகுதிகளை ஆர்ஜிதம் செய்ய, அந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களை எல்லாம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசிக்கொண்டே போய்க் கொண்டிருக்கக் கூடாது.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமானது. மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறை அதிகாரிகள், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களை எல்லாம் ஒரு குழுவாக அமைத்து, நாங்கள் நேரடியாக ஆய்வு செய்து, அந்த இடங்கள் குடியிருப்பதற்கு ஏற்ற இடங்கள், அதனால் நீர்வரத்து குறையாது, நீர் வரத்துக்குப் பாதிப்பு வராது எனறு பரிந்துரை வருமேயானால் அதை உடனடியாக அந்த மக்களுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்கிறபோது வசதி படைத்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்தால் அகற்றப்படும் என்றும், ஏழை

1995 நவம்பர் 8]

எளியவர்கள் ஆக்கிரமிப்பு செய்தால் அகற்றப்பட மாட்டாது என்றும் உறுதிமொழியை இப்போதும் கொடுக்கவில்லை. எப்போதும் கொடுக்கவில்லை, என்றும் கொடுக்கவில்லை, என்றும் கொடுக்கப் போவதும் இல்லை. ஆனால் அது ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலத்தினுடைய தன்மையைப் பொறுத்து இருக்கிறது. வாய்க்கால் புறம்போக்கு, குளம் புறம்போக்கு இப்படி என்றால் நிச்சயமாக யாராக இருந்தாலும் அகற்றப்படுவார்கள். அதுமட்டுமல்ல, ஏழை எளியவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அங்கே குடிசை போட்டுவிடுகிறார்கள். அங்கே தண்ணீர் வரும்போது, அந்தக் குடிசைகள் பாதிக்கப்படுகின்றன. அதனால் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அகற்றப்படுவார்கள். மற்றும் ஒன்று, சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவைப் போட்டு, அதைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவைப் போட்டு அதை பார்க்கச் சொன்னால்—நான் சட்டமன்ற உறுப்பினர்களைக் குறைத்து மதிப்பிடுவதாக நீங்கள் கருதக் கூடாது—நீங்கள் உங்களுடைய தொகுதியிலே ஓட்டு வாங்க வேண்டுமென்று, பொது மக்களுடைய எண்ணங்களுக்கு ஏற்ப, எப்படியாவது பட்டா கொடுத்தால் போதும் என்ற உணர்வு எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னையும் சேர்த்து, இருக்கத்தான் செய்யும். அதனால், நடைமுறையில் வருவாய்த் துறை அதிகாரிகள் பார்த்து, சிபாரிசு செய்யும்போது, அதிலே ஆக்கிரமிப்பு எதுவாக இருந்தாலும், பொது நோக்கோடு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திரு. கே.பி. ராஜு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

42—

நில ஆக்கிரமிப்புகளைத் திரும்பப்பெற நடவடிக்கை

16082*—திரு. கே.பி. ராஜு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, சி.பி.எம். கலைக் கல்லூரி அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு திரும்பப் பெற நடவடிக்கை எடுக்குமா?